சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.2/2010

பெயர் திரு. சரோஜா நாள்.03.02.2026
த/பெ.குப்புசாமி

**வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 3, 5, 9 மற்றும் 10ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

எத்தனை வருடங்களுக்கு முன்பு எனக்கு திருமணம் ஆனது என்று நியாபகம் இல்லை. என் பெரிய மகளின் பிறந்த தேதி எனக்கு தெரியாது. எனக்கு 5 பெண் மக்கள். குப்புசாமி எனக்கு 2 வது கணவர் என்றால் இல்லை. எனக்கு முதல் கணவர் யாரும் கிடையாது. சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துகள் பெருமாளின் சொத்துகள் என்றால் அவரின் அப்பாவின் சொத்துகள். பெருமாளின் தகப்பனார் பெயர் லட்சுமணன். என்னுடைய 2 வது மைத்துனர் பெயர் குணசேகரன். 2ம் பிரதிவாதி மற்றொரு மைத்துனர். இருவருக்கும் அவரது தகப்பனார் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். என் கணவர் சுகாதாரத் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார். எந்தெந்த புல எண்களுக்கு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. லட்சுமணனின் மொத்த சொத்துகளுக்கு வழக்கு தாக்கல் செய்யாமல் என் கணவரின் சொத்துகளுக்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் லட்சுமணனின் மொத்த சொத்துகளுக்கும் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் என் கணவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகளுக்கு மட்டும் பாகம் கோரி வழக்கை திருத்தினேன் என்றால் சரிதான். என் கணவர் மற்றும் மாமனாருக்கிடையே எந்த வருடம் பாகப் பிரிவினை நடந்தது என எனக்கு தெரியாது. சுமார் 15 வருடங்களுக்கு முன்பு அவ்வாறு பாகப் பிரிவினை ஏற்பட்டது என்றால் தெரியாது. நான் கூறி தான் என் மகள்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் இல்லை. வாதிகள் என்னென்ன பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்று

எனக்கு தெரியாது. வழக்கு போட்ட விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் கணவர் இவ்வழக்கு பிரதிவாதிகளுக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் என் கணவருடன் எனக்கு பேச்சுவார்த்தையே கிடையாது. என் மகள்களுக்கு நானும், என் கணவரும் சேர்ந்து திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரிதான். வாதிகளுக்கும், என் கணவருக்குமிடையே பேச்சு வார்த்தை கிடையாது. என் கணவருக்கு வேறு மனைவிகள் கிடையாது. வழக்கு விவரங்கள் தெரியாமல் நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. என் கணவர் எங்களுக்கு வீடு கட்டி தந்தார் என்றால் சரிதான். முதல் விசாரணை விவரங்கள் நான் சொல்லி தட்டச்சு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லிதான் தட்டச்சு செய்யப்பட்டது. முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் என்னால் தற்போது சொல்ல இயலாது. பாகப் பிரிவினை ஆனதென்று ஒப்புக் கொண்டு, பாகப் பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை ஏதும் வரவில்லை. 1ம் வாதியின் வாரிசுகள் எனக்கு பேத்திகள். 2ம் பிரதிவாதி எனது கணவர். என் கணவர் தற்போது என்னுடன் இல்லை. சுமார் 15 வருடங்களாக என் கணவர் என்னுடன் இல்லை. என் மகள்கள் என் கணவருடன் இல்லை. தனித்தனியே வசித்து வருகின்றனர். என் கணவர் என்னை வீட்டை விட்டு துரத்தி விட்டார். என் கணவருக்கு குடி பழக்கம் உள்ளதால் என்றால் உள்ளது. அதனால் தான் எங்களுக்குள் அடிக்கடி சண்டை வரும் என்றால் சரிதான். எட்டியப்பன் மகன் மதியழகனை எனக்கு தெரியாது. என் கணவர் மற்றும் அவரது சகோதரர்கள் சேர்ந்து என்னை அடித்தார்கள் என்றால் சரிதான். 1ம் வாதியின் இறப்பு இறுதி சடங்கிற்கு என் கணவர் வரவில்லை. என் கணவரின் உறவினர்கள் யாரும் வரவில்லை. என் கணவர் சொத்து விற்ற விவரம் எனக்கு தெரியாது. அதன் விவரம் என் கணவரின்

சகோததரர்களுக்கு தெரியுமா என்றால் அவர்களும் சேர்ந்து தான் விற்றார்கள். வாதிகள் என் மகள்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் என் கணவருக்கும் 15 ஆண்டுகளாக உள்ள பிரச்சனையைப் பயன்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**